# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, வைகாசி - 20 வியாழன் 03.06.2021 மலர் - 2, இதழ் - 58


## கோடைகால பண்பாட்டு வகுப்பு 2021

பாரதி சேவா சங்கம் மற்றும் அசோக்நகர் ஆஞ்சநேயர் கோயில் இணைத்து நடத்திய இ - கோடைக்கால பண்பாட்டு வகுப்பு 2021 மிக சிறப்பாக கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்று ஜூன் 1ல் இனிதே முடிவடைந்தது.

கொரோனா பொதுமுடக்கம் காரணமாக சென்ற வருடம் முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்டது இந்த இ - பண்பாட்டு வகுப்பு. அது புதியது, பல படிப்பிணைகளைத் தந்தது. அதனால் இந்த வருடம் அது நமக்கு பழகி விட்டது. சென்ற வருடம் போலவே ஒரு முக்கியக்குழு பல கிளைக்குழுக்கள் என்றுதான் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், வரவேற்புக் காரணமாக இம்முறை ஒருபடி உயர்ந்து இரண்டு முக்கியக் குழுக்கள் பல கிளைக்குழுக்களாக மாறியது.

இம்முறை தமிழகம் மட்டுமின்றி பெங்களூரு போன்ற பல பகுதிகளில் இருந்தும் மாணவர்கள் கலந்து கொண்டனர். பக்திப் பாடல்கள், பஜனை, தேசபக்திப் பாடல், அமுதமொழி, கதை, கைவினைப்பொருட்கள், ஓவியம் என பல பிரிவுகள் இந்த வகுப்பில் இருந்தது. மாணவர்கள் என்ற கணக்கில் 150 மாணவர்கள் கலந்து கொண்டனர். ஆனால், எல்.கே.ஜி முதல் 12வது படிக்கும் மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும்கூட இந்த வகுப்பில் கலந்துகொண்டு கலாச்சார பண்பாட்டு விசயங்களை அறிந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஓவியம் வரையவே தெரியாது என்று சொன்ன சிறுவன் இன்று அழகாக வரைகிறான், பாட்டே வராது என்ற சொன்னவர்கள் அருமையாக பாடுகிறார்கள் என்பது இந்த வகுப்புக்கு கிடைத்த வெற்றி. கூட்டு முயற்சிக்கு என்றுமே வெற்றி என்பதற்கு இந்த வகுப்பு ஒரு உதாரணம்.




# எதிர்மறை செய்தி தரும் பத்திரிகை




கொரோனா பாதித்த கடந்த 13 மாதங்கள் உலகெங்கிலும் உள்ள மனித இனத்திற்கு மிகவும் சவாலானவை. சீனாவில் தோன்றிய கொரோனா கிருமி உலகையே முடக்கிப்போட்டுள்ளது. அதற்கு எதிராக அரசுகளும் மருத்துவர்களும் போராடி வரும் வேளையில், பல்வேறு பத்திரிகைகளும் ஊடகங்களும் அவர்களின் செய்திகள், கட்டுரைகள் வாயிலாக மக்களுக்கு ஆறுதல், தைரியம் தருவதற்கு பதலாக அவர்களின் மனத்தில் பயத்தையே விதைத்துள்ளன என்பது சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. குறிப்பாக பல வெளிநாட்டு பத்திரிகைகள், பாரதத்தில் எதிர்மறை செய்திகளை பரப்புவதில் அதிக முனைப்புக் காட்டியுள்ளன. பாரதத்தில் கடந்த 14 மாதங்களில் வெளியிடப்பட்ட 550க்கும் அதிகமான கட்டுரைகளை குறித்து விரிவாக ஆராய்ச்சி செய்தபோது, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தை சார்ந்த மிகப்பெரிய சிறந்த பத்திரிகைகள் என கூறப்படும் வெளியீடுகளில் வந்த கட்டுரைகள் அதிர்ச்சியூட்டும் முடிவுகளை அளித்துள்ளது.

அவற்றில் வெளியான கட்டுரைகளில் 76 சதவீதம் பயம், அவநம்பிக்கை, மன உளைச்சல், பதட்டத்தை ஏற்படுத்துவது, எதிர்மறை விமர்சனம் என்ற வகையிலேயே இருந்துள்ளன. பி.பி.சி, தி எகனாமிஸ்ட், தி கார்டியன், வாஷிங்டன் போஸ்ட், நியூயார்க் டைம்ஸ் மற்றும் சி.என்.என் ஆகிய 6 உலகளாவிய வெளியீடுகளில் கடந்த 14 மாத காலப்பகுதிகளில் வெளியான அவர்களின் 552 கட்டுரைகள் இதனை நிரூபித்துள்ளன. இதில் பி..பி.சி முதலிடத்தில் உள்ளது. அதன் தலைப்புகளில் 96 சதவீதம் எதிர்மறையாகவே இருந்தன. அடுத்த இடங்களை தி கார்டியன், நியூயார்க் டைம்ஸ், வாஷிங்டன் போஸ்ட் போன்றவை பிடித்துள்ளன.

---





# 2 டிஜி யாருக்கு கொடுக்கலாம்

டி.ஆர்.டி.ஓ அமைப்பின் ஆய்வகமான இன்ஸ்ட்டியூட் ஆப் நியூக்ளியர் மெடிசன் அண்ட் அலைட் சயின்ஸ் (ஐ.என்.எம்.ஏ.எஸ்), டாக்டர் ரெட்டிஸ் லெபாரட்டரிஸ் நிறுவனத்துடன் இணைந்து, டிடியோக்ஸி டி குளுகோஸ் 2டிஜி மருந்தை தயாரித்துள்ளது. இந்த 2டிஜி மருந்தை அவசர காலத்துக்குப் பயன்படுத்திக் கொள்ள கடந்த 1ம் தேதி டி.சி.ஜி.ஐ அனுமதி அளித்தது. இந்த மருந்தை தண்ணீரில் கலந்து குடிக்க முடியும். 'இதை மருத்துவரின் பரிந்துரை இன்றி வாங்கிப் பயன்படுத்தக் கூடாது. மிதமான கோவிட் தொற்று பாதித்தவர்களுக்கு அதிகபட்சமாக 10 நாட்கள் வரை 2டிஜி மருந்தை மருத்துவர்கள் பரிந்துரைக்கலாம். இந்த மருந்தை எடுத்துக்கொள்ள விரும்பும் நோயாளிகள், அவர்கள் சிகிச்சை பெறும் மருத்துவமனை வழியாக டாக்டர் ரெட்டிஸ் நிறுவனத்தை 2DG@drreddys.com என்ற இணைய முகவரியில் அணுகி, பதிவு செய்து, பெற்று பயன்படுத்தலாம். கட்டுப்படுத்தப்படாத சர்க்கரை நோய், இருதய நோய்கள், ஹெபாடிடிஸ், சிறுநீரக பாதிப்பு போன்ற இணை நோய் கொண்டவர்களுக்கு இந்த மருந்தை கொடுத்து சோதிக்கப்படாததால் கூடுதல் கவனம் தேவை. கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார்களுக்கு கொடுக்கக் கூடாது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 'லேசான அறிகுறி கொண்ட நோயாளிகள் 2 முதல் 2.5 நாட்களில் குணமடைய வாய்ப்புள்ளது. இந்த மருந்தை எடுத்துக்கொள்வதால் ஆக்சிஜன் தேவையை 40 சதவீதம் வரை குறைக்கலாம்' என, மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

# இட ஒதுக்கீடு சலுகை



கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தில் உரிய கல்வி தகுதி இல்லாமல் பணியில் சேர்ந்து பதவி உயர்வு பெற்ற கௌதமன் என்பவரின் பதவி உயர்வையும் ரத்து செய்ய வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி மகாதேவன், 'உரிய கல்வித் தகுதி பெறாத கௌதமனின் நியமனமும் பதவி உயர்வும் சட்டவிரோதமானது, அவரை நியமனம் செய்வதற்கு பரிந்துரைத்த தேர்வுக் குழுவுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு உத்தரவிட்டார். கல்வி நிறுவனங்கள் வெளிப்படைத் தன்மையுடன் செயல்பட வேண்டும். விவரங்களை அறிவிப்பு பலகை, இணையத்தில் வெளியிட வேண்டும். பணியாளர்கள் தகுதி குறித்த அதிகாரிகள் மூன்று மாதத்திற்குள் விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். நேர்முகத்தேர்வு அனைத்தும் வீடியோ பதிவு செய்ய வேண்டும். சட்டவிரோதமாக நியமனம் செய்யப்பட்டவர்கள் மீது உடனடியாக பணி நீக்கம், ஊதியம் திரும்ப வசூலிப்பு செய்ய வேண்டும்' என தெரிவித்தார். முக்கியமாக, 'இட ஒதுக்கீட்டின் கீழ் பல்கலைக்கழகங்களில் பணி நியமனம் பெறுவதற்காக மதம் மாறியது கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட பணியாளர்களை உடனடியாகப் பணி நீக்கம் செய்ய வேண்டும்' என தனது உத்தரவில் தெரிவித்துள்ளார்.




# வளரும் பாரதப் பொருளாதாரம்

இந்த நிதியாண்டில் பாரதப் பொருளாதாரம் 9.3% சதவீதம் வளர்ச்சி அடையும் என 'மூடிஸ்' முதலீட்டாளர் சேவை சர்வதேச அமைப்பு கணித்துள்ளது. கடந்த நிதியாண்டில் பாரதப் பொருளாதாரம் 7.3 சதவீதம் வீழ்ச்சி அடைந்தது. ஆனால், நடப்பு நிதியாண்டான 2021 2022ல் பொருளாதாரம் 9.3 சதவீதம் வளர்ச்சி அடையும். மீண்டும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதால், பொருளாதார நடவடிக்கைகள் தற்காலிகமாக முடங்கியுள்ளது. ஆனால் இதன் தாக்கம், கொரோனா முதல் அலையைப்போல் கடுமையாக இருக்காது. ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரையிலான நடப்பு நிதியாண்டின் முதலாவது காலாண்டில் பொருளாதார நடவடிக்கைகளில் வீழ்ச்சி ஏற்படலாம். அதன்பிறகு பொருளாதாரம் மீண்டெழும். அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடப்பு நிதியாண்டு முடிவடையும்போது, 9.3% பொருளாதார வளர்ச்சி ஏற்படும். 2022 2023க்கான அடுத்த நிதியாண்டில், 7.9% பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என அதில் கூறப்பட்டுள்ளது.

# வங்கிகளுக்கு விஜய் மல்லையா சொத்துக்கள்



தொழிலதிபர் விஜய் மல்லையா பல்வேறு வங்கிகளில் கடன் பெற்று சுமார் 9,000 கோடி ரூபாய்க்கு மேல் நிலுவை வைத்துள்ளார். பிரிட்டனுக்கு தப்பிச் சென்ற அவரை அங்கிருந்து நாடு கடத்தி அழைத்து வருவதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடக்கின்றன. இந்நிலையில் மல்லையாவுக்கு சொந்தமான பல சொத்துக்களை அமலாக்க துறை முடக்கி வைத்துள்ளது. அதில் குறிப்பிட்ட சிலவற்றை வங்கிகள் குழுமத்துக்கு வழங்க மும்பை சிறப்பு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. கடந்த வாரத்திலும் இதேபோன்று வேறு சில சொத்துக்களை வங்கிகள் குழுமத்துக்கு வழங்க சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அந்த உத்தரவை எதிர்த்து தொடரப்பட்ட மல்லையாவின் மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

# கொரோனா சிகிச்சைக்காக வங்கிக் கடன்



கொரோனா வைரஸ் தொற்றை சமாளிக்க ரூ.50 ஆயிரம் கோடி நிதியை அவசரகால மருத்துவ சேவைக்காக ரிசர்வ் வங்கி ஒதுக்கீடு செய்தது. இதனையடுத்து, பொதுத்துறை வங்கிகள் ஒன்றிணைந்து கொரோனா சிகிச்சை கடன் என தனி பிரிவை துவங்கியுள்ளது. அதன்படி, கொரோனா மருத்துவ சிகிச்சைக்கு தனி நபர்களுக்கு ரூ. 25 ஆயிரம் முதல் ரூ. 5 லட்சம்வரை கடன் வழங்கப்படும் என பொதுத்துறை வங்கிகள் அறிவித்துள்ளன. மாத சம்பளம் பெறுவோர், இதர பிரிவினர் மற்றும் ஓய்வூதியம் பெறுவோரும் இத்தகைய கடன் வசதியை பயன்படுத்திக் கொள்ளலாம். எவ்வித பிணையும் இல்லாமல் இந்த கடன் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருப்பூரில் தி.மு.க. வினர் அராஜகம்



கொரோனா முழு ஊரடங்கு காரணமாக, திருப்பூர் மாவட்ட ஆட்சியரிடம் காய்கறி மற்றும் பழங்களை விற்பனை செய்ய முறையாக அனுமதி பெற்ற விவசாயி ஒருவர் தனது தோட்டத்தில் விளைந்த மாம்பழங்களை விற்பனை செய்வதற்காக பெருமாநல்லூர் வந்துள்ளார். அப்போது அவரை தடுத்து நிறுத்தி மாமூல் கேட்டுள்ளார் ஊராட்சி ஒன்றிய துணைத்தலைவரான சி.டி.வேலுசாமி. விவசாயி தர மறுக்கவே தங்கள் பகுதிக்குள் வெளிநபர்கள் வந்து எந்த பொருளையும் விற்ககூடாது என்று தகராறு செய்துள்ளார். இதில், பெருமாநல்லூர் காவல்துறையினர் தலையிட்டபோது, அவர்களை இதில் தலையிடக் கூடாது என்று மிரட்டப்பட்டனர். இப்படி, மாவட்ட ஆட்சியர் அனுமதி அளித்த பின்னரும் தி.மு. கவினர் அட்டூழியங்களில் ஈடுபட்டு வருவது விவசாயிகளிடமும் பொதுமக்களிடமும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. முதல்வர், தனது கட்சியினரின் இதுபோன்ற தவறான செயல்பாடுகளை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர் அப்பகுதி மக்கள்.

# கருப்பு பூஞ்சை விழிப்புணர்வு





கொரோனா தொற்றைத் தொடர்ந்து கரும்பூஞ்சை நோய் பரவி வருகிறது. தொற்று நோய் சட்டத்தின் கீழ் கருப்பு பூஞ்சை நோயாக அறிவிக்கப்பட்டுள்ளது. 'பொதுமக்களிடையே இந்த நோய் குறித்து விழிப்புணர்வு இல்லாததால் அவர்கள் நோய் முற்றிய பிறகே சிகிச்சைக்கு வருகின்றனர். எனவே, கருப்பு பூஞ்சை குறித்து முன்னரே கண்டுபிடிக்க, புதுச்சேரி மக்களிடையே அது குறித்து போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த அனைத்து வேலைகளையும் அரசு செய்து வருகிறது' என புதுச்சேரி ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்தார்.

# கிரிப்டோ கரன்சி குறித்து ரிசர்வ் வங்கி



கடந்த சில நாட்களாக வங்கிகள், தங்கள் வாடிக்கையாளர்களுக்கு கிரிப்டோ கரன்சி எனும் மெய்நிகர் நாணய பயன்பாடு குறித்த மின்னஞ்சல்களை அனுப்பி வருகின்றன. இந்நிலையில் இது குறித்து வீளக்கம் அளித்துள்ள ரிசர்வ் வங்கி, கடந்த 2020 மார்ச் மாதத்தில் உச்சநீதிமன்றம், ரிசர்வ் வங்கியின் 2018ம் ஆண்டு சுற்றறிக்கைக்கு தடை விதித்ததால் வங்கிகள் அந்த சுற்றறிக்கையை மேற்கோள் காட்ட முடியாது என தெரிவித்துள்ளது. எனினும், வங்கிகளும் நிதி நிறுவனங்களும், தங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளும் படிவமான கே.ஒய்.சி, பணமோசடி தடுப்பு (ஏ.எம்.எல்), நிதி பயங்கரவாதத்திற்கு எதிரான செயல்பாடுகள் (சி.எஃப்.டி) மற்றும் பணமோசடி தடுப்புச் சட்டம் (பி.எம்.எல்.ஏ), வெளிநாட்டுக்கு பணம் அனுப்புவது பெறுவதற்கான அந்நிய செலாவணி மேலாண்மைச் சட்டம் (ஃபெமா) போன்றவற்றின் கீழ் செயல்முறைகளை தொடர்ந்து மேற்கொள்ளலாம். இந்த சட்டங்களின் கீழ் வாடிக்கையாளர்கள், விதிமுறைகள் உட்பட்டு செயல்படுவதை உறுதிசெய்யவேண்டும் என தெரிவித்துள்ளது.

# ஆம்போடெரிசின் ஏற்றுமதிக்கு தடை




கொரோனாவுக்கு பிறகு தற்போது கரும்பூஞ்சை நோய் பரவி வரும் நிலையில், அதற்கு சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்படும் ஆம்போடெரிஸின்B ஊசியின் தேவை அதிகரிப்பால் சில மாநிலங்களில் அதற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அந்த மருந்தை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசுத் தடையை விதித்துள்ளது என்று வெளிநாட்டு வர்த்தக அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆம்போடெரிஸின்B ஜி.எஸ்.டி விலக்கு பட்டியலிலும் சேர்க்கப்பட்டுள்ளது.


# முஸ்லிம் கும்பலால் தாக்கப்பட்ட மருத்துவர்

அசாமின் நாகான் மாவட்டத்தில் உள்ள ஹோஜாயில், கொரோனா பராமரிப்பு மையத்தில் (சி.சி.சி) சமீபத்தில் பணியமர்த்தப்பட்ட ஒரு இளம் மருத்துவர், இரக்கமற்ற ஒரு இஸ்லாமிய கும்பலால் கொடூரமாகத் தாக்கப்பட்டார். அங்கு அனுமதிக்கப்பட்ட ஒரு கொரோனா நோயாளி சிகிச்சையின் போது இறந்துவிட்டார். இதனால் ஆத்திரமடைந்த அவரின் உறவினர்கள் அந்த மருத்துவரைத் தாக்கியுள்ளனர். அங்கு ஒருவரின் அலைபேசியில் பதிவுசெய்யப்பட்ட இந்த காட்சிகள், சமூக வலைத்தளங்களில் வெளியானது. இது மருத்துவர்கள் மற்றும் பொது மக்களிடம் கடுமையான அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அம்மாநில முதல்வர் டாக்டர் ஹிமந்தா பிஸ்வா சர்மா, இது ஒரு காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் என்று கண்டித்துள்ளதுடன், குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்ய அசாம் காவல்துறைக்கு உத்தரவிட்டார். முக்கிய குற்றவாளிகள் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னர் ஆண்ட கட்சிகளால், பல ஆண்டுகளாக அசாமின் ஹோஜாய், நாகான் மாவட்டத்தில் உள்ள ஜமுனாமுக், ரூபி போன்ற பகுதிகளில் அண்டை நாடுகளை சேர்ந்த முஸ்லிம்களின் சட்டவிரோத ஊடுருவல்கள் அதிகரித்தன. ஊழல் அதிகாரிகள், அரசியல்வாதிகள் ஆதரவுடன் அவர்களுக்கு போலி வாக்காளர் அடையாள அட்டைகள், ரேஷன் கார்டுகள் போன்ற ஆவணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் அப்பகுதிகளில் மிகப்பெரிய மக்கள் தொகை மாற்றம், சட்டவிரோத ஊடுருவல், வன்முறைகள், நில ஆக்கிரமிப்பு, அசாமின் கலாச்சாரத்திற்கும் நாகரிகத்திற்கும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



# சிறுமியின் புகார் எதிரொலி



கொரோனா தொற்று காரணமாக பள்ளிப் பாடங்கள் ஆன்லைன் வகுப்புகள் வழியாக நடத்தப்படுகின்றன. சமீபத்தில் ஆன்லைன் வகுப்புகள் நீண்டநேரம் நடப்பதால் குழந்தைகளுக்கு அதிகவேலை, சிரமம் இருப்பதாக காஷ்மீரைச் சேர்ந்த 6 வயது சிறுமி பிரதமர் மோடியிடம் புகார் தெரிவித்திருந்தார். அதன் அடிப்படையில் அங்கு ஆன்லைன் வகுப்புகளுக்கு நேரக்கட்டுப்பாடு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அம்மாநில நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தொடக்கக்கல்விக்கு முந்தைய வகுப்பு மாணவர்களுக்கு தினமும் அரை மணி நேரமும், தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு ஒன்றரை மணி நேரமும் ஒதுக்கப்பட வேண்டும். 9 முதல் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு 3 மணி நேரத்துக்கு மிகாமலும் வகுப்புகள் நடத்தப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேகி ஆரோக்கியமான உணவா?

உலகம் முழுவதும் பிரபலமான நெஸ்லே நிறுவனத்தின் மேகி நூடுல்ஸ் 2 நிமிடங்களில் ரெடி என்ற விளம்பரத்தால் குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை அதிகம் விரும்பி சாப்பிடும் ஒரு உணவாகிப்போனது. ஆனால், உடனடி உணவுகள் அனைத்தும் உடலுக்கு ஒவ்வாதது என பல மருத்துவர்கள், உணவுத்துறை நிபுணர்கள் எடுத்துக்கூறியும் யார் காதிலும் விழவில்லை. இந்நிலையில், நெஸ்லே நிறுவனத்தின் உள் அறிக்கையின்படி, அதன் 60 சதவீத உணவுப்பொருட்கள் ஆரோக்கியமானவை என்ற பட்டியலில் வரவில்லை அதில் மேகியும் ஒன்று. இதனால் தனது உணவு தொடர்பான இலாகாகளையும் உத்திகளையும் மாற்றுவது குறித்து நெஸ்லே ஆலோசித்து வருவதாகவும், மக்களின் ஆரோக்கியத்தை மனதில் கொண்டு அவர்களுக்கு ஊட்டச்சத்துடன் சீரான உணவை சுவையாகவும் ஆரோக்கியமாகவும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளது நெஸ்லே. உலக உணவு மற்றும் பானங்கள் தயாரிப்புகளில் 37 சதவீதம் சந்தையைக் கொண்டுள்ளது நெஸ்லே. அடிக்கடி சர்ச்சையில் சிக்குவது மேகிக்கு ஒன்றும் புதிதல்ல என்பது அனைவருக்கும் தெரிந்ததே.




# ஆயுஷ் 64 மருந்து இலவசம்

மத்திய ஆயுஷ் அமைச்சகம், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு, வீட்டு தனிமையில் இருப்பவர்களுக்கு, 'ஆயுஷ் 64' என்ற, மருந்தை சேவாபாரதி இலவசமாக வழங்குகிறது. இந்த மருந்தை அறிகுறியற்றவர்கள், லேசான மற்றும் மிதமான தொற்று உள்ளவர்கள் எடுத்து கொள்ளலாம். தொற்று பாதித்த ஏழு நாட்களுக்குள் இம்மருந்தை எடுத்து கொள்ளலாம். அலோபதி மருந்துடன் சேர்த்தும் சாப்பிடலாம். இந்த மருந்தை, சென்னையில் தொற்றால் பாதிக்கப்பட்டு, வீட்டு தனிமையில் இருப்போர் சேவாபாரதி தொண்டர்களிடம் இலவசமாக பெறலாம். இதற்காக, 32 இடங்களில் சேவை மையம் துவங்கப்பட்டுள்ளது. இம்மருந்தை பெற நோயாளியின் பெயர், வயது, பாலினம், முகவரி, ஆதார் நகல், பராமரிப்பாளர் பெயர், மொபைல் போன் எண், ஆர்.டி.பி.சி.ஆர்., பரிசோதனை நகல் விபரங்களுடன் நேரில் சென்று வாங்கி கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு 98408 79433 அல்லது 73050 87893 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம்.




# திசை திருப்புகிறதா ஐ.எம்.ஏ ?

பதஞ்சலி நிறுவனத்தின் யோகா குரு பாபா ராம்தேவ் அலோபதியை வெற்று நடைமுறை என்று அறிவித்த வீடியோ வைரலாகி பெரும் சர்ச்சை வெடித்தது. இந்தியன் மெடிக்கல் அசோசியேஷன் (ஐ.எம்.ஏ) உடனடியாக களத்தில் குதித்தது, அவரது கருத்துக்களுக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்தது. மேலும் காவல் நிலைய புகார், ரூ .1000 கோடி நஷ்டஈடு, அவதூறு வழக்கு என ராம்தேவை அச்சுறுத்தியது.

ராம்தேவின் கருத்து குறித்து சுகாதார அமைச்சகம் தனது மறுப்பை வெளிப்படுத்தியது, ராம்தேவ் தனது அறிக்கைகளைத் திரும்பப் பெற கடிதம் எழுதியது. ராம்தேவும் தனது அறிக்கையை வாபஸ் பெற்றார். ஆனால், அதே சமயத்தில் ஐ.எம்.ஏ குறித்து வெளியான பணத்தை பெற்றுக்கொண்டு தனியார் நிறுவனப் பொருட்களுக்கு சான்றளிப்பது, இந்திய மருத்துவ சங்கத்தின் தேசியத் தலைவர் ஜெயலால், தொற்றுநோயைப் பயன்படுத்தி மக்களை கிறிஸ்தவ மதத்திற்கு மாற்ற தன் பதவியையும் மருத்துவமனைகளையும் தவறாகப் பயன்படுத்துவது குறித்த அவரது பேட்டி, அவருக்கு எதிரான புகார்கள், வழக்குகள் போன்ற விஷயங்கள் அடுத்தடுத்து வெளியானதால் தனது நற்பெயரை இழந்த ஐ.எம்.ஏ, அதனை மறைக்கும் விதமாக, தற்போது பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மத்திய சுகாதார அமைச்சகத்திற்கு கடிதம் எழுதியுள்ளது.

ஐ.எம்.ஏவின் தற்போதைய மற்றும் கடந்தகால 17 உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்ட அக்கடிதத்தில், ராம்தேவ் கருத்துக்கள் தேசத்துரோகமாக கருதப்பட வேண்டும், அவர் தேசிய தடுப்பூசி திட்டத்திற்கு எதிராக மக்களின் மனதில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளார், தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதில் அரசின் முயற்சிகளுக்கு சேதத்தை ஏற்படுத்தியுள்ளார். அவர் மீது பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட வேண்டும் என்று கோரியுள்ளது ஐ.எம்.ஏ. முன்னதாக பாபா ராம்தேவின் 25 முக்கியக் கேள்விகளுக்கு ஐ.எம்.ஏ இதுவரை பதில் அளிக்கவில்லை என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.



## ஓய்வூதிய விதிகளில் திருத்தம்



அரசு ஊழியர்களுக்கான சிவில் சர்வீசஸ் ஓய்வூதிய விதிகளில் மத்திய அரசு சில திருத்தங்களை கொண்டுவந்துள்ளது. அதன்படி, உளவுத்துறை அல்லது பாதுகாப்பு தொடர்பான அமைப்புகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற அதிகாரிகள் தங்கள் அமைப்பு தொடர்பான எந்தவொரு தகவலையும் அதிகாரத்தின் அனுமதியின்றி வெளியிடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட விதிகளின்படி, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசு நிறுவனங்களில் பணிபுரிபவர்கள், ஓய்வு பெற்றதும், அந்த அமைப்பின் களம், செயல்பாடுகள், நிபுணத்துவம் உள்ளிட்ட எந்தவொரு தகவலையும் எந்த விதத்திலும் பகிர்ந்து கொள்வதற்கு தடை விதிகப்பட்டுள்ளது.



## ஹர்ஷ் வர்தனுக்கு சிறப்பு விருது

உலக புகையிலை ஒழிப்பு தினத்தையொட்டி 2019ஆம் ஆண்டு இந்தியாவில் இசிகரெட்டை ஒழிக்கவும், சூடுபடுத்தப்பட்ட புகையிலைப் பொருட்களை ஒழிக்கவும் சட்டம் இயற்றியதற்கு அங்கீகாரம் வழங்கும் விதத்தில் மத்திய மந்திரி ஹர்ஷ் வர்தனுக்கு சிறப்பு அங்கீகார விருது அறிவிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ராஸ் அதானம் கேப்ரியாசிஸ் அறிவித்துள்ளார். உலக அளவில் ஆறு பிராந்தியங்களில் உள்ள தங்கள் கிளைகள் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் ஒருவருக்குப் புகையிலை கட்டுப்பாடு தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பாராட்டி உலக சுகாதார அமைப்பு சிரப்பு விருது வழங்கி கௌரவித்து வருகிறது. அவ்வகையில் இந்த ஆண்டுக்கான விருது மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## பாதிரிகளை அடக்க வாடிகன் புதிய சட்டம்



கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைமை மதகுருவான போப் பிரான்சிஸ், சிறாருக்கு பாலியல் தொல்லை தரும் பாதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யும் சட்டத்தை சில வாரங்களுக்கு முன் அமல்படுத்தினார். இதற்கு மக்களிடையே பெரும் வரவேற்பு கானப்பட்டது. இந்நிலையில், சிறார்கள் மட்டுமின்றி வயது வந்தோரும் பாதிரியார்களால் பாலியல் கொடுமைக்கு ஆளாகின்றனர். அப்படி நடக்கும் குற்றங்களை கிரிமினல் குற்றமாக பதிவு செய்வதற்கான சட்ட திருத்தத்தை போப் அறிவித்துள்ளார்.



## பாகிஸ்தான் பாக் வேக்

பாகிஸ்தான் அரசு சீனாவின் உதவியுடன் உருவாக்கிய கொரோனா தடுப்பூசியான பாக் வேக்கை அறிமுகப் படுத்தியுள்ளது. அந்நாட்டு பிரதமர் இம்ரான்கானின் சுகாதாரம் தொடர்பான சிறப்பு உதவியாளர் டாக்டர் பைசல் சுல்தான், தடுப்பூசியின் உற்பத்தி விரைவில் தொடங்கப்படும் என்று அறிவித்தார். சீனாவுக்கு நன்றியினை தெரிவித்துள்ளார். இதில் பேசிய சீன தூதர் நோங் ரோங் ‘சீன தடுப்பூசியை பரிசாக ஏற்றுக்கொண்ட முதல் நாடு பாகிஸ்தான்’ என்று குறிப்பிட்டார். ஆனால், 'பல நாடுகள் நம்பாத சீனாவின் தடுப்பூசிக்கு பாகிஸ்தான் அரசு ஸ்டிக்கர் ஒட்டி பெருமை தேடிக்கொள்கிறது' என அந்நாட்டு மக்களே கிண்டலடித்து வருகின்றனர்.

# ஃபைசர் தடுப்பூசி பக்கவிளைவு



இஸ்ரேலில், கடந்த டிசம்பர் 2020 முதல் மே 2021 வரை, இஸ்ரேலின் மக்கள் தொகையில் 55 சதவீதத்தினருக்கு அதாவது, 5 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு கொரோனா தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளது. இந்த தடுப்பூசி போட்டவர்களிடையே 275 மயோர்கார்டிடிஸ் எனப்படும் இதய அழற்சி நோய்கள் பதிவாகியுள்ளன. இதை குறித்த ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட ஒரு கமிஷனின் முடிவுகளில் இது தெரிவிக்கப்பட்டுள்ள அந்நாட்டு சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதய அழற்சியை அனுபவித்த பெரும்பாலான நோயாளிகள், மருத்துவமனையில் நான்கு நாட்களுக்கு மேல் செலவிடவில்லை, 95 சதவீத வழக்குகள் லேசானவை என வகைப்படுத்தப்பட்டுள்ளன. 16 முதல் 30 வயதுடைய ஆண்களிடையே நடத்தப்பட்ட ஆய்வில், ஃபைசர் இரண்டாவது டோஸ் தடுப்பூசி செலுத்திக்கொண்டதற்கும் மயோர்கார்டிடிஸ் தோன்றுவதற்கும் இடையில் தொடர்புள்ளதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது. இது குறித்த ஃபைசர் நிறுவனத்தின் ஒரு அறிக்கையில், 'மயோர்கார்டிடிஸ் குறித்த இஸ்ரேலிய ஆய்வு பற்றி அறிந்திருக்கிறோம். அனால், தடுப்பூசிக்கும் நோய்க்கும் இடையிலான தொடர்பு எதுவும் ஊர்ஜிதப்படுத்தப்படவிலை. பாதகமான நிகழ்வுகள் முழுமையாக மதிப்பாய்வுகள் செய்யப்படுகின்றன' என தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு ஆலோசனைக் குழுவும் மயோர்கார்டிடிஸ் மற்றும் தடுப்பூசிகளுக்கு இடையில் ஒரு இணைப்பு இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு செய்ய பரிந்துரைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.



# சீனாவின் ஊடக சுதந்திரம்

கடந்த ஆண்டு ஜூன் 16ம் தேதி நமது பாரதத்தை சேர்ந்த ராணுவ வீரர்களுக்கும் சீன வீரர்களுக்கும் இடையே கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் எல்லையில் மோதல் ஏற்பட்டது. இதில், நம் தேசத்து எல்லையை காக்க வீரதீரமாக செயல்பட்ட நமது 20 வீரர்கள் வீர மரணம் அடைந்தனர். சீன தரப்பில் 40 வீரர்கள் கொல்லப்பட்டனர் என தகவல் வெளியானது. ரஷ்ய பத்திரிகையான டாஸ், 45 சீன வீரர்கள் கொல்லப்பட்டனர் என கூறியது. சீனா இதனை மறுத்தது. பிறகு, விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற ரீதியில், மோதலில் 4 சீன வீரர்கள் மட்டுமே கொல்லப்பட்டனர். ஒருவர் காயமுற்றார் என ஒப்புக்கொண்டது. இந்நிலையில், சீனாவின் பிரபல பிளாக்கர் குய்யு ஜிமிங் என்பவர், இந்த மோதலில் சீன தளபதி ஒருவர் உயிர் தப்பியுள்ளார். வீரர்களின் பலி எண்ணிக்கை அதிக அளவில் இருக்கும் என அவர் பதிவிட்டார். சமூக வலைதளத்தில் 25 மில்லியன் பேர் அவரை பின்பற்றுகின்றனர். இதனால் கோபமுற்ற சீன கம்யூனிச அரசு, அவருக்கு 8 மாத சிறை தண்டனை விதித்து உத்தரவிட்டது. மேலும், அடுத்த 10 நாட்களுக்குள் தேசிய ஊடகம் மற்றும் பிரபல வலைதளம் ஒன்றின் வழியே குய்யு வெளிப்படையாக மன்னிப்பு கோர வேண்டும் என்றும் உத்தரவிட்டு உள்ளது.

# உலக சைக்கிள் தினம்

சைக்கிள்..., எந்தக் காலத்திலும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் பிடித்தமானது சைக்கிள். ஒரு காலத்தில் போக்குவரத்திற்கு முக்கியச் சாதனமாக இருந்த இது, தற்போது பெரும்பாலும் உடற்பயிற்சி சாதனமாக மாறி விட்டது. ஆனாலும், சமீபகாலமாக சைக்கிள் பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே அதிகரித்து வருகிறது. காரணம், ஒன்று உடல் ஆரோக்கியம். இரண்டாவது சுற்றுச்சூழல் பாதுகாப்பு. பெட்ரோல், டீசல் வாகனங்கள் வெளியிடும் புகையால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகிறது. சைக்கிள் இந்த பாதிப்பைக் குறைக்கிறது. அதனால், சைக்கிள் ஓட்டுவது என்பது ஒரே கல்லில் இரண்டு மாங்காய்.

பதினேழாம் நூற்றாண்டில் பொழுதுபோக்காக பிரான்ஸைச் சேர்ந்த கோம்டி மீடி டீ ஷிவ்ராக் உருவாக்கியதுதான் சைக்கிள். இரண்டு மரத்துண்டுகளை வைத்து விளையாட்டுத்தனமாக சைக்கிளுக்கு அவர் உருவம் கொடுத்தார். இந்த சைக்கிளுக்கு பெடல்கள் கிடையாது. ஒவ்வொரு காலகட்டத்திலும் கண்டுபிடிப்புகள் மெருகேறுவதுபோல, சைக்கிளும் மெருகேறியது. மரத்தால் செய்யப்பட்ட சைக்கிள் பிறகு உலோகத்திற்கு மாறியது. பெடல், பல் சக்கரம், சங்கிலி என மெல்ல உருமாற்றம் பெற்றது. ஜான் கெம்ப் ஸ்டார்லி என்பவர் இன்றைய நவீன சைக்கிளின் தந்தை என அழைக்கப்படுகிறார். அவர் வடிவமைத்த மாடலைத்தான் இன்று நாம் பயன்படுத்துகிறோம்.

தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால், இன்று சைக்கிள் பயன்பாடு வெகுவாகக் குறைந்துவிட்டது. ஆனால், உலகிற்கே சவால் விடும் காற்று மாசுபாடு காரணமாக, அமெரிக்கா, ஜப்பான், நெதர்லாந்து போன்ற நாடுகளில் போக்குவரத்திற்கான முதன்மை வாகனமாக சைக்கிளுக்கு மாறி வருகின்றனர். இங்கும் தற்போது இந்த விழிப்புணர்வு அதிகரித்து வருகிறது. சென்னை போன்ற மாநகரங்களில் சாலைகளில் பலர் சைக்கிளில் செல்வதைப் பார்க்க முடிகிறது. வீட்டிற்குள் ஒரே இடத்தில் சைக்கிள் போன்ற இயந்திரத்தில் உடற்பயிற்சி செய்வதைவிட இயற்கையான சூழலில் நிஜ சைக்கிளை ஓட்டுவது நல்லது என்கிறார்கள் மருத்துவர்கள். கால் பாதத்தில் இருந்து, மூளைவரை உடலின் அத்தனை உறுப்புகளையும் இயங்க வைப்பது சைக்கிள். அரைமணி நேரம் சைக்கிள் ஓட்டினாலே 300 கலோரி கொழுப்பு எரிக்கப்படுகிறது. சர்க்கரை அளவையும் சீராக்க முடியும் என்பது இனிப்பான செய்தி.

ஜெ.எஸ். சரவணகுமார்

